22.11.2017

தினமலர்

## 1,000 விவசாயிகளுக்கு 'சோலார் பம்ப் மோட்டார்'

இலவச மின்சாரத்திற்கு காத்திருக்கும் விவசாயிகளுக்கு, 'சோலார் பம்ப் மோட்டார்' வழங்கப்பட உள்ளதுமின் சிக்கனம் கருதி ., விவசாயிகளுக்கு, சூரியசக்தியில் இயங்கும் சோலார் பம்ப் மோட்டார்களை, 2013 முதல், அரசு வழங்கி வருகிறதுஇந்தாண்டு ., 1,000 விவசாயிகளுக்கு, 10 குதிரை திறன் உடைய மோட்டார்கள் வழங்க, அரசு திட்டமிட்டுள்ளதுஇதற்காக ., 50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது . சோலார் பம்ப் மோட்டார்களை கொள்முதல் செய்வதற்கான ஏற்பாடுகளை, வேளாண் பொறியியல் துறையினர், தற்போது துவக்கியுள்ளனர்.

இது குறித்து, வேளாண் பொறியியல் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

சோலார் மோட்டாரின் விலை, ஏழு லட்சம் ரூபாய்; 90 சதவீத மானியத்தில், விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளதுஇதற்கு கட்டணமாக ., விவசாயிகள், 65 ஆயிரம் ரூபாய் முதல், 70 ஆயிரம் ரூபாய் மட்டுமே செலுத்த வேண்டும்இந்த மோட்டார்கள் ., 100 மீட்டர் முதல், 150 மீட்டர் ஆழம் வரை, நீரை உறிஞ்சி எடுக்கும் திறன் உடையவைசோலார் மோட்டார் பெறும் விவசாயிகளின் ., இலவச மின்சார விண்ணப்பம் ரத்து செய்யப்படும்ஒப்பந்த அடிப்படையில் ., சோலார் மோட்டார்களை வழங்கும் நிறுவனங்கள், அதை, ஐந்து ஆண்டுகள் வரை பராமரிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

- நமது நிருபர் –

## இன்றும் நாளையும் மழை வரலாம்

'காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில், இன்றும், நாளையும் மழை பெய்யலாம்' என, வானிலை மையம் அறிவித்துள்ளது.

பருவ மழை தீவிரம் இது குறித்து :, சென்னை வானிலை மையம் கூறியுள்ளதாவது:

வட கிழக்கு பருவ மழை, கேரளாவில் தீவிரமாகி உள்ளதுஅதனால் ., கேரளாவை

ஒட்டிய தமிழக மாவட்டங்களில், பரவலாக மழை பெய்துள்ளதுநேற்று காலை ., 8:30 மணியுடன் முடிவடைந்த, 24 மணி நேரத்தில், தமிழகத்தில் அதிகபட்சமாக, மணிமுத்தாறில், 10 செ.மீ., மழை பதிவாகிஉள்ளதுபாபநாசம் ., 9; கன்னியாகுமரி, 8; சேரன்மகாதேவி, நாகர்கோவில், மயிலாடி, ராதாபுரம், அம்பாசமுத்திரம், 6; இரணியல், குளச்சல், பூதப்பாண்டி, 5; செங்கோட்டை, ஸ்ரீவைகுண்டம், 4 செ.மீ., மழை பதிவாகியுள்ளதுமற்ற சில பகுதிகளில் ., 1 செ.மீ., மழை பெய்துள்ளதுஇன்றும்., நாளையும், தமிழகத்தின் உள் மாவட்டங்களில் மிதமான மழையும், மேற்கு தொடர்ச்சி மலையில், கேரளாவை ஒட்டிய பகுதிகளில் கன மழையும், மற்ற இடங்களில் லேசான மழையும் பெய்யலாம்.

காரணம் இந்திய பெருங்க :டலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை, அரபிக் கடலில் இருந்து, தமிழகத்தின் தென் மாவட்டங்கள் வரை பரவியுள்ள மேலடுக்கு சுழற்சி ஆகியவை தான், மழைக்கு காரணம் என, தெரிய வந்துள்ளது இவ்வாறு அந்த . .மையம் கூறியுள்ளது

## முட்டை விலை 505 காசாக நிர்ணயம்

நாமக்கல்தமிழகம் : மற்றும் கேரளாவில், முட்டை கொள்முதல் விலை, 505 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுநாமக்கல்லில் ., தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடந்ததுமுட்டை உற்பத்தி ., விற்பனை நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர்.

அதையடுத்து, 516 காசுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை விலை, 11 காசு குறைத்து, 505 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது .சென்னையில் .550 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டைக்கோழி மற்றும் கறிக்கோழி விலையில், மாற்றம் செய்யப்படவில்லை.

## குமரியில் விடிய விடிய கனமழை

நாகர்கோவில்குமரி மாவட்டத்தில் :, நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று காலை வரை, இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்ததுஅதிகபட்சமாக கன்னிமாரில் ., 7.6 செ.மீ., மழை பதிவானதுஇதனால் ., பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது.

மழையின் போது, இருளப்பபுரத்தில், டிரான்ஸ்பார்மரில் மின்னல் தாக்கி, தீப்பற்றி

எரிந்தது .50-க்கும் மேற்பட்ட வீடுகளில் மின் சாதனங்கள் பழுதாகின விடிய விடிய . மழை பெய்தாலும், நேற்று பகலில் நல்ல வெயில் அடித்தது.

## இன்றும் நாளையும் மழை பெய்ய வாய்ப்பு




**சென்னை:** 'காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் மேலடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில், இன்றும், நாளையும்(நவ.,22, 23) மழை பெய்யலாம்' என, வானிலை மையம் அறிவித்துள்ளது.

### பருவ மழை தீவிரம் :

**இது குறித்து, சென்னை வானிலை மையம் கூறியுள்ளதாவது:** வட கிழக்கு பருவ மழை, கேரளாவில் தீவிரமாகி உள்ளது. அதனால், கேரளாவை ஒட்டிய தமிழக மாவட்டங்களில், பரவலாக மழை பெய்துள்ளது. இன்றும், நாளையும், தமிழகத்தின் உள் மாவட்டங்களில் மிதமான மழையும், மேற்கு தொடர்ச்சி மலையில், கேரளாவை ஒட்டிய பகுதிகளில் கன மழையும், மற்ற இடங்களில் லேசான மழையும் பெய்யலாம்.

## காரணம் :

இந்திய பெருங்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை, அரபிக் கடலில் இருந்து, தமிழகத்தின் தென் மாவட்டங்கள் வரை பரவியுள்ள மேலடுக்கு சுழற்சி ஆகியவை தான், மழைக்கு காரணம் என, தெரிய வந்துள்ளது. இவ்வாறு வானிலை மையம் கூறியுள்ள.

## ஏக்கரில் இயற்கை விவசாயம் விவசாயி கல்லுவழி சாதிக்கும் -

வறட்சி மாவட்டமான சிவகங்கையில் இயற்கை விவசாயம் மேற்கொண்டு பலருக்கு முன்னோடி விவசாயியாக திகழ்கிறார் எம்ஆபிரகாம்.,71. காளையார்கோவில் அருகே கல்லுவழி கிராமத்தை சேர்ந்த இவர் 40 ஏக்கரில் மா, பலா, நாவல் போன்ற தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்துள்ளார் இயற்கை விவசாயத்தில் . தனிவழியாக செயல்படும் இவர், இதுவரை அரசிடம் கடன் போன்ற எந்த உதவியும் பெற்றதில்லை இவரது தோட்டத்தை இதுவரை .10 கலெக்டர்கள் மற்றும் அமைச்சர்கள், நீதிபதிகள், முன்னோடி விவசாயிகள் பார்த்துவிட்டு பாராட்டியுள்ளனர் . சுவாமிநாதன் பவுண்டேஷன் சார்பில்.எஸ்.இவருக்கு இயற்கை விஞ்ஞானி எம் சமுதாய விருதுவழங்கப்பட்டுள்ளது.

### நெல்லுக்கு பதில் கொய்யா

ஆபிரகாம் கூறியதாவது :20 வயதிலேயே விவசாயம் செய்ய ஆரம்பித்தேன் . இதனால் .வறட்சியால் நஷ்டம் ஏற்பட்டது .துவக்கத்தில் நெல் சாகுபடி செய்தேன் புதிய அணுகுமுறையாக இயற்கை விவசாயத்திற்கு .நெல் சாகுபடியை கைவிட்டேன் .மாறினேன்கொய்யா, மா, பலா போன்ற தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்ய துவங்கினேன் தற்போது .40 ஏக்கரில் 2 ஆயிரம் பலா, 600 நாவல் மரங்கள் உள்ளன . இரண்டு ஏக்கரில் தேக்கு மரங்கள், ஒரு ஏக்கரில் மகாகனி மாமரம், இமாபசந்த் ரகத்தில் 100 மரங்கள் மற்றும் கொய்யா, சப்போட்டா மரங்களும் உள்ளன தற்போது .500 மா மரக்கன்றுகள் அடர் நடவு முறையில் நடவு செய்துள்ளோம் மானாவாரியாக . .கறிவேப்பிலை நடவு செய்துள்ளேன்

### வெள்ளாடு கிலோ ரூ.250

வெள்ளாடும் வளர்த்து வருகிறேன் பலா மரம் .25 அடி, கொய்யா 16 அடி, சப்போட்டா

24 அடி இடைவெளியில் அமைந்தால் நன்றாக வளர்ச்சி பெறும் பழங்களின் .
கழிவுகளை ஊற வைத்து, அதனை இயற்கை உரமாக பயன்படுத்துகிறேன் தவிர .
மண்புழு உரம், பஞ்சகாவ்யம், மீன் அமிலம், முட்டை அமிலம், வேப்பம் புண்ணாக்கு,
கடலை புண்ணாக்கு போன்றவற்றையும் பயன்படுத்துகிறேன்.
ஆடு ஒன்று ஒரு குட்டி ஈன்ற 21 நாட்களில் மீண்டும் சினை பருவம் வந்துவிடும் பின் .
150 வது நாளில் மற்றொரு குட்டி ஈன்று விடும் .242 நாட்களில் 2 முறை குட்டி ஈன்று
விடும் குட்டி வளர்ந்த .8 மாதங்களிலேயே விற்பனை செய்யலாம் ஆட்டுக்கறி கிலோ .
250 ரூபாய்க்கும், கிடாவை 270 ரூபாய்க்கும் கொடுக்கிறேன்.

**இயற்கை உரமாகும் கழிவு**

வெள்ளாடு வளர்ப்பிலும் ஒரே இடத்தில் அடைத்து வைத்து, இரை வைக்காமல்,
தோட்டத்தில் மேய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளேன் தற்போது .250 ஆடுகள் உள்ளன .
அவை தங்குவதற்கு30 ஆயிரம் ரூபாயில் 'செட் அமைத்துள்ளேன் மேய்வதற்கு .
தோட்டத்தை3, 3 ஏக்கர்களாக பிரித்து 5 அடி உயர கம்பி வலையால் அடைத்து
விட்டேன் பலா மரங்களில் இருந்து கீழே விழும் பழுத்த இலைகள் ஆடுகளுக்கு நல்ல .
அவற்றை ஆடுகளே .புற்களையும் வெட்டுவதில்லை .உணவாக உள்ளது
மேலும் .இதனால் அவற்றை அகற்றுவதற்கான செலவும் இல்லை .மேய்ந்துவிடும்
ஆடுகளின் கழிவு, சிறுநீர் மரங்களுக்கு நல்ல உரமாக உள்ளது, என்றார்.
தொடர்புக்கு, 98431 85444. - இஜெகநாதன்., சிவகங்கை.

**பயணங்கள் முடிவதில்லை**

கால்நடைகளை ஓரிடத்தில் வாங்கும் விவசாயிகள், அவரவர் சொந்த இடங்களுக்கு
கொண்டு செல்ல ரயில் வசதி இருப்பின் சில முன் எச்சரிக்கை நடவடிக்கைகள்
மேற்கொள்வது அவசியம்.

**மாடுகளின் பாதுகாப்பு**

அகல ரயில் பாதை பெட்டியில் 10 மாடுகள் அல்லது 15 கன்றுகள் என்ற
எண்ணிக்கையிலும், குறுகிய ரயில் பாதை பெட்டியில் 4 மாடுகள் அல்லது 6 கன்றுகள்
என்ற எண்ணிக்கையில் மாடுகளை ஏற்றி வர வேண்டும் மாடுகளின் முகம் ஒன்றுடன் .
ஒன்று நேராக இருக்குமாறு கட்டி வைத்து கொண்டு வர வேண்டும் ரயில் .
பெட்டியின் தரையில் கால்நடைகளுக்கு காயம் ஏற்படாதவாறு6 செ.மீ., தடிமன்

அளவுக்கு தரையில் வைக்கோல் நிரப்பி இருக்க வேண்டும் பயணத்தின் போது .
.மாடுகளுக்கு தேவையான தீவனம் ரயில் பெட்டியின் நடுவில் வைக்க வேண்டும்

**லாந்தர் விளக்கு கூடாது**

மாடுகளுக்கு காற்றோட்ட வசதிக்காக ரயில் பெட்டியின் மேல்புறம் திறந்த வெளியாக இருக்க வேண்டும் .மேல்புறம் நெருக்கமான வலை பொருத்தப்பட்டிருப்பது அவசியம் . இதன் மூலம் ரயில் இஞ்சினில் இருந்து வரும் தீப் பொறியினால் தீ விபத்தை மாடுகளை ஏற்றிச் செல்லும .தடுக்கலாம்் ரயில் பெட்டி மற்ற சரக்குப் பெட்டிகளின் வரிசையில் மத்திய பகுதியில் பொருத்தப்பட வேண்டும் மாடுகளை ஏற்றி செல்லும் . பெட்டியில் சமையல் செய்வது மற்றும் லாந்தர் விளக்குகளை எடுத்துச் செய்வது மாடுகளின் நெஞ்சுப்பகுதி வரையில் இரண்டு இரும்பு குழாய்கள் ஒன்று .கூடாது60 முதல் 80 செ.மீ., மற்றொன்று 100 முதல் 110 செ.மீ., வரையிலும் பொருத்தியிருக்க வேண்டும்.

**கறவை மாட்டில் கறவை**

கறவை மாடுகளை கொண்டு செல்லும்போது ஒரு நாளைக்கு இரண்டு முறை பால் கறக்க வேண்டும் .கன்றுகளுக்கு தேவையான பாலைப் புகட்டுவது அவசியம் . கூடுமான வரை மாடுகளைபோக்குவரத்து நோக்கத்தில் இரவு நேரங்களில் கொண்டு செல்லலாம் பகல் நேரத்தில் கூடுமான வரையில் மாடுகள் கீழே இறக்கப்பட்டு . தீவனம், தண்ணீர் மற்றும் ஓய்வும் அளிக்கப்பட வேண்டும் மாடுகளை கொண்டு . மாடுகள் .செல்லும்போது வேறு பொருட்களை அதுனுடன் ஏற்றக்கூடாது பயப்படாமலும், காயமடையாமலும் இருக்க, அவை ரயிலின் இஞ்சினை நோக்கி முகப்பகுதி இருக்கும்படி ஏற்ற வேண்டும் சாதாரண தரை உள்ள வாகனங்களில் . வழுக்குவதை தவிர்க்க தேங்காய் நார் விரிப்பு அல்லது மரப்பலவை போடப்பட்டிருக்க .வேண்டும் தொடர்புக்கு 94864 69044. - டாக்டர் விராஜேந்திரன் . முன்னாள் இணை இயக்குனர் கால்நடை பராமரிப்புத்துறை.

## தேசிய உணவு பாதுகாப்பு பயிறு இயக்கம்

தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் பயறு திட்டம் 2007 அக்டோபர் முதல் செயல்பட்டு வருகிறது மாவட்டம் தோறும் பயறு உற்பத்தியை பெருக்கும் நோக்கத்தோடு . இத்திட்டத்தை தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக சிறப்பாக .உருவாக்கப்பட்டது செயல்பட்டதால் மதுரை வேளாண் துறைக்கு மத்திய அரசின்'க்ரிஷி கர்மன்' விருது மாநில அளவில் வழங்கப்பட்டு வருகிறது.

**மானியங்கள் ஏராளம்**

இத்திட்டத்தின் கீழ் பயறு உற்பத்தியை பெருக்குவதற்காக விவசாயிகளை ஊக்குவிக்க பல்வேறு மானியங்கள் வழங்கப்படுகிறது விவசாயிகளுக்கு தேவையான .15 ஆண்டுக்கு உட்பட்ட பயறு வகை ரகங்களுக்கு ஒரு கிலோவிற்கு 25 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறதுப .யறு மகசூலை அதிகப்படுத்த பயன்படுத்தப்படும் பூச்சி மருந்துகளுக்கும் மானியம் உண்டு நுண்ணுாட்டக் கலவை பயன்படுத்த . எக்டேருக்கு500 ரூபாய், பவர் ஸ்பிரேயருக்கு 3,000 ரூபாய், ரோட்டவேட்டருக்கு 35 ஆயிரம் ரூபாய், ஸ்பிரிங்ளர் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் என ஏராளமான மானியம் வழங்கப்படுகிறது பயறு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் மண்ணின் வளத்தினை . .பாதுகாத்து கொள்ளலாம்

**1,000 ஏக்கரில் திடல்**

வரப்புகளில் துவரை சாகுபடியை அதிகரிக்க எக்டேருக்கு 100 ரூபாய் மானியம் உண்டுதேர்வு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களில் பயறு தொகுப்பு செயல் விளக் .கத் திடல் 1000 எக்டேர் பரப்பளவில் அமைக்க ஏற்பாடுகள் நடக்கிறது இதற்காக . விவசாயிகளுக்கான .விவசாயிகளுக்கு கிராம அளவில் பயிற்சி வழங்கப்படவுள்ளது பைப்) நீர் கடத்தும் குழாய் .பயிற்சி கிராம அளவில் வழங்க ஏற்பாடுகள் நடக்கிறது .சி.வி.பி (லைன், அல்லது எச்.இ.பி.டி., பயன்படுத்துவதற்கு 15 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது மானியம் பெற மாவட்ட அளவில் வட்டார வேளாண் . .உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்

- பராமநாதன். வேளாண் துணை இயக்குனர் மத்திய திட்டம், மதுரை.

## மானாவாரி நிலக்கடலை சாகுபடி அதிக மகசூல் பெற புது உத்திகள்

உலக அளவில் இந்தியா எண்ணெய் வித்து உற்பத்தியில் மூன்றாவது இடமும், நிலக்கடலை உற்பத்தியில் முதலிடமும் வகிக்கின்றது இந்தியாவில் எண்ணெய் . வித்துப் பயிர்களில் நிலக்கடலை40 சதவிகிதம் பரப்பளவில் பயிரிடப்பட்டு முதல் இடத்தில் இருக்கிறது நிலக்கடலையில் .47 சதவிகிதம் முதல் 53 சதவிகிதம் வரை எண்ணெய்யும், 26 சதவிகிதம் புரதச்சத்தும் பொதிந்துள்ளது.

**மானாவாரி மாண்பு**

தமிழகத்தில் முக்கிய எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலை 6.19 லட்சம் எக்டரில் சாகுபடி செய்யப்பட்டு 10.98 லட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது இதில் .70

சதவிகிதம் மானாவாரியிலும், 30 சதவிகிதம் இறவையிலும் சாகுபடி செய்கின்றனர் .
தென் மாவட்டங்களில் மதுரை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை
மாவட்டங்களில் 56,163 எக்டரில் நிலக்கடலை சாகுபடி நடக்கிறது இதில் .84
சதவிகிதம் மானாவாரி சாகுபடி என்பது குறிப்பிடத்தக்கது மற்ற நாடுகளை .
தமிழகத்தில் நிலக்கடலையின் சராசரி .ஒப்பிட்டால் இந்தியாவில் விளைச்சல் குறைவு
விளைச்சல் எக்டருக்கு1,400 கிலோ என்ற அளவில் உள்ளது.

**நிலக்கடலை 'ரிச்'**

நிலக்கடலையில் பெரும்பாலும் பூ அதிகமாக பூக்கும் மொத்த பூக்களில் .35 முதல் 50
சதவிகிதம் பூக்களே காய்களாக மாறும் இதை .மீதமுள்ள பூக்கள் உதிர்ந்து விடும் .
தவிர்த்தால்10 முதல் 15 சதவிகிதம் விளைச்சலை அதிகரிக்கலாம் பூ உதிர்வதை .
குறைக்கவும், காய் பிடிப்பதற்கும் கோவை வேளாண் பல்கலை கழகம் 'நிலக்கடலை
ரிச்' என்னும் நிலக்கடலைக்கு தேவையான ஊட்டச் சத்துக்கள் மற்றும் வளர்ச்சி
ஊக்கிகள் கலந்த பூஸ்டரினை வெளியிட்டுள்ளது ஏக்கருக்கு .2.25 கிலோவை 200
லிட்டர் தண்ணீரில் கரைத்து தேவையான அளவு ஒட்டும் திரவம் சேர்த்து பூக்கும்
தருணத்திலும் 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்க வேண்டும்.

**உரமாகும் தென்னை**

இந்த ஊட்டச்சத்து கலவையினை செடிகள் நன்கு நனையும்படி காலை அல்லது
மாலையில் கைத் தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும் இதனால் மானாவாரியில் .
10 முதல் 15 சதவிகிதம் விளைச்சல் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது வறட்சியை தாங்கும் .
தன்மையும் அதிகரிக்கும ் இதனை பூச்சி ., நோய் மருந்துகளுடன் கலக்கக்கூடாது .
ஏக்கருக்கு3 டன் மக்கிய தென்னை நார்க்கழிவு இட வேண்டும் இதனால் மண்ணின் .
மேலும் .ஈரப்பிடிப்புத்தன்மை அதிகரித்து பயிர் வாடாமல் இருக்கும்0.5 சதவிகிதம்
பொட்டாசியம் குளோரைடு கரைசலினை )5 கிராம் பொட்டாசியம் குளோரைடினை
ஒரு லிட்டர் தண்ணீரில் கரைக்க வேண்டும் தேவையான அளவு தயாரித்து பூ மற்றும் (
.காய் பிடிக்கும் பருவத்தில தெளிக்கலாம்

தமிழகத்தில் நிலக்கடலையின் சராசரி விளைச்சல் எக்டருக்கு 1,400 கிலோ என்ற
அளவில் உள்ளது. தொடர்புக்கு 94865 01060. - பசாலிகா பாக்கியத்து. விஜயலட்சுமி.
வேளாண் அறிவியல் நிலையம் அருப்புக்கோட்டை.

தினமணி

## நீர்ப்பிடிப்புப் பகுதியில் பலத்த மழை: சேர்வலாறு கடனாநதி அணைகளின் நீர்மட்டம் உயர்வு



பாபநாசம் கீழ் அணைப் பகுதியில் பெய்த பலத்த மழையால், தாமிரவருணி ஆற்றில் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு.

திருநெல்வேலி மாவட்டத்தில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த பலத்த மழையால், அணைகளுக்கான நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. சேர்வலாறு, கடனாநதி அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. அணைப் பகுதியில் பெய்த பலத்த மழையால், தாமிரவருணி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் கடந்த 2 தினங்களாக மழை நீடித்து வருகிறது. செவ்வாய்க்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை-95, பாபநாசம் கீழ் அணை-76, சேர்வலாறு அணை-56, மணிமுத்தாறு அணை (அதிகபட்சம்) 100, கடனாநதி அணை-20, ராமநதி அணை-26, கருப்பாநதி அணை-38, குண்டாறு அணை-31, அடவிநயினார் அணை-15, நம்பியாறு அணை-13, கொடுமுடியாறு அணை-25, கன்னடியன் அணைக்கட்டு-78.

**பிற பகுதியில்...**: திருநெல்வேலி-1, பாளையங்கோட்டை-2, நான்குனேரி-6, ராதாபுரம்-

57, சேரன்மகாதேவி-64, அம்பாசமுத்திரம்-56.4, தென்காசி-14.6, செங்கோட்டை-39, ஆய்க்குடி-16, சிவகிரி-6.

நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்து வரும் பலத்த மழையால் அணைகளின் நீர்வரத்து கணிசமாக உயர்ந்துள்ளது. பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு விநாடிக்கு 1800 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு 477 கனஅடி, கடனாநதி அணைக்கு 349 கனஅடி, ராமநதி அணைக்கு 58.30 கனஅடி, கருப்பாநதி அணைக்கு 11 கனஅடி, அடவிநயினார் அணைக்கு 67 கனஅடி, கொடுமுடியாறு அணைக்கு 30 கனஅடி நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம்-98 அடி, சேர்வலாறு அணை 4.50 அடி உயர்ந்து 98.75 அடி, மணிமுத்தாறு அணை-82.50 அடி, கடனாநதி அணையின் நீர்மட்டம் மேலும் 2.70 அடி உயர்ந்து 77.70 அடி, ராமநதி அணை-63.50 அடி, கருப்பாநதி அணை -64.96 அடி, குண்டாறு அணை-35.88 அடி, அடவிநயினார் அணை- 91 அடி, வடக்குப்பச்சையாறு அணை 25.50 அடி, நம்பியாறு அணை-21.65 அடி, கொடுமுடியாறு அணை-42 அடியாகவும் உள்ளது.

**திடீர் வெள்ளப்பெருக்கு:** நீர்ப்பிடிப்புப் பகுதியிலும், பாபநாசம் கீழ் அணைப் பகுதியிலும் மழை நீடித்து வருவதால், அணைகளில் இருந்து பாசனத்துக்கு திறக்கப்பட்ட நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது. எனினும், செவ்வாய்க்கிழமை காலை தாமிரவருணி ஆற்றில் கல்லிடைக்குறிச்சியில் ஆயிரம்கல் மண்டபத்தை ஒட்டி தண்ணீர் சென்றது. திடீரென ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் குளித்துக் கொண்டிருந்த மக்கள் அவசரமாக வெளியேறினர். ஆற்றில் சுமார் 2,500 கனஅடி தண்ணீர் சென்றதாக அணை வட்டாரங்கள் தெரிவித்தன. பிற்பகலில் நீர்வரத்து குறைந்தது. பாபநாசம், சேர்வலாறு அணைகளில் இருந்து 700 கனஅடி, கடனாநதி அணையில் இருந்து 70 கனஅடி, ராமநதி அணையில் இருந்து 35 கனஅடி, கருப்பாநதி அணையில் இருந்து 25 கனஅடி, அடவிநயினார் அணையில் இருந்து 50 கனஅடி, நம்பியாறு அணையில் இருந்து 30 கனஅடி, கொடுமுடியாறு அணையில் இருந்து 60 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

**அருவிகளில் அதிகரிப்பு:** மணிமுத்தாறு அருவி, பாபநாசம் அகஸ்தியர் அருவியில் நீர்வரத்து கணிசமாக அதிகரித்திருந்தது. நீர்பிடிப்புப் பகுதியில் பெய்த பலத்த மழையால் ஏற்பட்ட கடும் வெள்ளத்தில் மணிமுத்தாறு அருவியில் தடுப்பு கம்பிகள், சுவர் அடித்துச் செல்லப்பட்டன. இதையடுத்து, பாதுகாப்பை கருத்தில் கொண்டு

அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கான தடை தொடர்ந்து நீடிப்பதாக வனத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.